# தமிழ்ச்சிட்டு

### நற்பண்புகள்

கூடி வாழ்தலே அன்பு ;
கொடுமை இலாதது பண்பு.

பொய் சொல்லாததே அறம் ;
பொறுத்துக் கொள்வது மறம்

கற்று நடப்பது கல்வி ;
கல்விக் கழகு பணிதல் !

ஈயார்க் கீவதே ஈகை ;
ஏழ்மையில் செப்பமே வாழ்க்கை



தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்

குரல்: 2. இசை: 1.

15 காசு



# உங்கள் மடல்கள்

O விடாய் கொண்டவன் நீருக்கு அலேவது போல், தேன் சொட்டும் தமிழ்ச்சிட்டை ஒவ்வொரு முறையும் எதிர்பார்க்கின்றேன். அது வந்த வுடன் படிப்பது பாலேநிலத்தில் நீரைப் பருகுவதுபோல் உணர்வு தோன்றுகின்றது.

—ஐ.மாதையன், தீராம்பட்டி-குட்டிப்பட்டி(அஞ்)ஓமலூர்,சேலம்(மா.வ)

O உள்ளங்கவர்ந்த ஆண்டுமலர் கண்டு இன்புற்றேன். ஆண்டு முழுவதும் வைத்துப் போற்றும் வகையில் அழகுடன் மிளிர்ந்தது. தனித்த உங்கட்கு என் வாழ்த்தும் பாராட்டும்.

—இமயன், 154, சித்தார்த்தா நகர், பெங்களூர்-2.

O
ஆண்டுமலர்த் தமிழ்ச்சிட்டே ஆடிவரக் கண்டோம்!
ஆயபல நிறவழகும் ஆக்கமுறக் கண்டோம்.
மாண்டபல மாணவர்நூல் மாட்சியெலாம் மேவி
மகிழ்வளித்த தமிழ்ச்சிட்டின் மாண்புரைப்போம் தாவி
காண்டலிலும் நோக்கலேயே காட்டியது சிட்டு!
கத்றவர்கள் உவந்தமிழ்ந்தோம் கருத்தமிழ்திற் பட்டு!
ஆண்டகையாம் ஆசிரியர் ஆர்வமேலும் ஓங்க,
அனேவருமே துணேபுரிவோம்! யாவருமே வாங்க!

—புலவர் பசும் பொற்கிழார், கமுதி (வழி) முகவை. மா. வ.

O தமிழக மண் மீதில் தவழ்ந்தாடும் சிறு குழந்தையான என் நெஞ்சை மயக்க வைத்த தலேவா! இச்சிறு பொழுதிலேயே எனக்குத் தமிழில் ஆர்வமும் ஈடுபாடும் நிறைய ஏற்பட்டுள்ளன. அதற்கு உங் கள் இதழ்களே காரணம்.

—சி. பூபதி, 10-ஆம் நிலே, அரசினர் பள்ளி, ஆரணி.

O அறிவுக்கும், ஆற்றலுக்கும் அரிய விருந்துதரும் தமிழ்ச்சிட்டுக்கு என் வாழ்த்து. இச் சிட்டில் வெளிவரும் புதிர்கள் அறிவுக்கு விருந் தளிக்கின்றன.

—செ. தனஞ்செயன், 11-ஆம் வகுப்பு. அ. உ. பள்ளி. சாத்தனூர்.

O தமிழ்ச்சிட்டைப் படிக்கப் படிக்க என் உள்ளத்தில் வானொலி ஒன்று உள்ளது போல் இருக்கின்றது. எப்பொழுதும் அமைதியாக இருக்கிறது. உங்களுக்கு எங்கள் நன்றி. அன்புகலந்த வாழத்துகள்!

—சோ. சிவாசி. 8—ஆம் வகுப்பு, சீனிவாச உ. பள்ளி. திருவையாறு.

# தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலைஇதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு !
இன்றைய சிறுவர் நாளைய உலகம் !
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல்–2 | தி. பி. ௧௯௯௮ மடங்கல் (ஆவணி) ஆகஃச்டு 67 | இசை–1


## உன் நண்பன் யார் ?

'உன் நண்பன் யார் என்பதை நீ எனக்குச் சொல்; நீ யார் என்பதை நான் உனக்குச் சொல்கின்றேன்' –என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. அதன் பொருள் 'நீ எந்தக் கூட்டத்தில் சேர்ந்திருக்கின்றாயோ, அந்தக் கூட்டத்தின் பண்பையே காலப் போக்கில் அடைவாய்' என்பது. எனவே நம் செப்பமான–ஒழுங்கான வாழ்க்கைக்கு நண்பர்களே உறுதுணையாக இருக்கின்றார்கள் என்பதை நாம் உணர வேண்டும்.

திருவள்ளுவப் பெருந்தகை தாம் எழுதிய 133 அதிகாரங்களில் 'நட்பு' என்னும் கருத்தில் மட்டும் 5 அதிகாரங்களை எழுதி, நட்பில் பெருமையையும் சிறுமையையும் ஒன்று விடாமல், என்றைய உலகத்


வெளியீட்டாளர், பொறுப்பாசிரியர்:– பெருஞ்சித்திரன்.
தென்மொழி மின் அச்சகம், கடலூர்–1.

திற்கும் பொருந்தும் வகையில் எழுதி உள்ளார். அவை நட்பு, நட்பாராய்தல், பழைமை, தீ நட்பு, கூடா நட்பு என்பவை ஆகும். அவ்வதிகாரங்களில் அவர் கூறும் கருத்துகளை ஒரு முறை ஊன்றிப் படியுங்கள். இவ்வுலகில் பிறந்தவர் எல்லாரும் அரசனுகவோ, துறவியாகவோ, அமைச்சனுகவோ, வேறு அதிகாரங்கள் உடையவராகவோ ஆக முடியாமல் இருக்கலாம். ஆனுல் எல்லாரும் பிறர்க்கு நண்பர்களாகவோ, அல்லது தமக்கு நண்பர்களைத் தேடிக் கொள்பவராகவோதாம் இருத்தல் வேண்டும். எனவேதான் திருக்குறளில் நட்பைப்பற்றி அவ்வளவு விரிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.

சிலர், 'எனக்கு ஏராளமான நண்பர்கள் இருக்கின்ருர்கள்' என்று பெருமையாகச் சொல்லிக் கொள்வது உண்டு. ஆனுல் அவர்கள் எல்லாருமே நல்ல நண்பர்கள் ஆகிவிடமாட்டார்கள். அவர்களில் ஓரிருவரே உண்மையான நண்பர்களாக இருப்பார்கள். நம்மிடம் பழகுபவர் எல்லாருமே நண்பர்கள் ஆகார். சிலர் சிரித்துச் சிரித்துப் பேசுவார்கள்; சிலர் சில நன்மை கருதி நம்மிடம் பழகுவார்கள்; சிலர் நம்மோடு பொழுது போக்கிற்காகத் தொடர்பு வைத்துக்கொள்வார்கள். இன்னும் சிலர் தங்களின் தீயபோக்கிற்கு நம்மைத் துணையாக்கிக்கொள்ள நெருங்கிப் பழகுவார்கள். ஆனுல் உண்மையில் இவர்கள் நமக்கு நல்ல நண்பர்கள் ஆகிவிடமாட்டார்கள்.

"உள்ளத்தில் கரவு வைத்துக் கொண்டு முகத்தில் மட்டும் சிரிப்பை வருவித்துப் பேசுபவர் நட்பை நாம் விலக்க வேண்டும். ஒருவனுடைய குணத்தையும், வாழ்க்கைச் சூழலையும், அவன் குற்றங்களையும், அவன் கொண்டிருக்கின்ற நண்பர்களையும் அறிந்து அவனிடம் நட்புச் செய்ய வேண்டும். அப்படி ஆய்ந்து கொள்ளப்பெருதவனுடைய நட்பு, இறுதிக் காலத்தில் நமக்கு மிகவும் துன்பந்தரும்; அப்படிப்பட்ட நட்பை நாம் விலக்கி விடுவதே நமக்கு ஊதியம்; இது போலவே நாமும், நம் குற்றங்களையெல்லாம், நாம் அழும்படி நமக்கு இடித்துச் சொல்லும் அன்பும், துணிவும், உலக வழக்கியல் அறிவும் உடையவர் நட்பை மேற்கொள்ளுதல் வேண்டும்" —என்றெல்லாம் திருவள்ளுவர் கூறியிருக்கின்ருர்.




# சிட்டு

**துரை-மாணிக்கம்**

மணியுடல் சிறிய சிட்டு!
மேலெலாம் மென்மைப் பட்டு!
துணிவுடன் விரிந்த வானில்
தொலைவெலாம் பறந்து செல்லும்!
பணிவுடன் அமரும்! நெஞ்சப்
பதட்டத்தில் உடல் நடுங்கும்;
அணிகுரல் முழக்கும்! கையை
ஆட்டிலும் பறந்து போகும்.

(முன்பக்கத் தொடர்ச்சி)

எனவே சிறுவர்களே! உங்களுக்குப் பெருமை தரும்படியான அன்பர்களையே நண்பர்களாக்கிக் கொள்ளுங்கள். சிற்றினஞ்சேர்தலை அறவே விட்டொழியுங்கள். வெறும் ஆரவாரமான வாய்ப் பேச்சுப் பேசுவோரையும், ஒழுங்கில்லாதவர்களையும் கண்டு அஞ்சி விலகுங்கள். நல்ல நண்பர்கள் நம் துன்பத்தைக் கண்டு விலகமாட்டார்கள். இன்பத்தில் பங்கு கேட்க மாட்டார்கள். நம் தவறுகளைப் போக்குவதிலும், சிறப்பானவற்றை ஊக்குவதிலும் நமக்குத் துணையாவார்கள். அத்தகையவர்கள் நட்பே நாம் சாகும் வரையிலும் – செத்தபின்பும் நமக்குப் பெருமை தருவது. நல்ல நண்பராக இருங்கள்! நல்ல நண்பர்களையே நாடுங்கள்!

பெண்சிட்டு ஆணைக் கண்டு
பிணங்கிடும்! குலவும்! கூடும்!
பண்ணொடு பாடும்; ஆடும்!
பழகிடில் அச்சம் நீக்கும்!
பெண்ணொடே ஆணும் சேர்ந்து
பழந்தாள்கள் சருகு சேர்த்துப்
பண்ணிடும் கூடு! கூட்டுப்
பணியினால் அமைந்த வீடு!

கூட்டினுள் முட்டை வைத்தே
அடைகாக்கும் பெண்! மற் றொன்று
வீட்டினைக் காவல் செய்யும்!
விடியலில் பறந்து சென்றே,
ஈட்டிடும் உணவு! வீட்டை
இலக்கிடும் பெண்ணைக் காக்கும்!
ஏட்டினிற் படித்த தில்லை!
இயற்கையாம் வாழ்க்கை கண்டீர்!

குஞ்சுகள் தோன்ற, ஆணும்
குறுவுடல் தாயும் சேர்ந்து,
பஞ்சுடற் பிள்ளை கட்குப்
பணிசெய்யும்! உணவை ஊட்டும்!
அஞ்சிடும் குஞ்சு கட்கே,
ஆறுதல் கூறும்! நாளும்
கொஞ்சிடும்! இறக்கை வந்தால்
கூட்டைவிட் டேகும் குஞ்சே!

சிற்றுடல் சிட்டு, நல்ல
சுறுசுறுப் போடு வாழும்!
சுற்றிலும் வலிய புட்கள்
சூழ்ந்திட அஞ்சி வாழும்!
கற்றறி வறிந்த தில்லை!
என்னினும் கற்றார் போல,
ஒற்றுமை! முயற்சி வாழ்க்கை!
ஒழுங்கெலாம் அதன்பால் உண்டே! O



# பெரியோர் கதை!

## அகரமுதலி சான்சன்.

அ. மாயிறைவன்.

தம்பி தங்கைகளே! நாம் "உலகில் பிறந்தமைக்கு ஏதேனும் ஒரு நினைவுக் குறிப்பை விட்டுச் செல்லவேண்டும். அவ்வாறில்லையேல் நமக்கும் கல்லுக்கும் என்ன வேற்றுமை" என்ருர் விவேகானந்தர். அதற்கேற்ப இவ்வுலக வாழ்வில் வாழ்ந்த பெரியோர்கள் வெவ்வேறு துறையில் தம்தம் நினைவை நிறுத்திச் சென்ருர்கள். அவர்களுள் ஆங்கில அறிஞர் சான்சன் என்பவர் இலக்கியத் துறையிலே புகழ் பெற்றவர். எனவே அவருடைய வரலாற்றை நீங்கள் அறிந்து புகழுலகில் முன்னணி பெறவேண்டுமென நினைந்து அவர் வரலாற்றைக் கூறுகிறேன். பயின்று பயனடையுங்களென வேண்டுகிறேன்.

மைக்கேல் சான்சன் என்பவருக்கும் சாரா போர்டு என்ற அம்மையாருக்கும் 1709-ஆம் ஆண்டு ஆங்கில நாட்டில் இலீச்பீல்டு என்ற சிற்றூரில் அறிஞர் சான்சன் பிறந்தார். இவர் நுண்ணறிவால் அனைவரையும் கவர்ந்தார்; அறிஞர் குழாமில் பேரறிஞராய்த் திகழ்ந்தார்; நினைவாற்றல் நிறைந்தவராக விளங்கினர். சான்சன் சிறுவராக இருக்கையில் ஒரு நாள் அவர் தாய் வழிபாட்டுப் பொத்தகம் ஒன்றைக் கொண்டுவந்து, அன்றைய வழிபாட்டிற்கு வேண்டிய சில வரிகளைச் சுட்டிக்காட்டி மனப்பாடம் செய்யுமாறு சானசனிடம் கூறிவிட்டு மாடிக்குச் சென்ருர். இரண்டாவது மாடிப்படியை அடைந்த போது, சான்சன் தம் பின்னே வருவதைக் கண்டு, சிறிது சீற்றத்துடன் "படிக்காமல் ஏன் வருகிருய்?" எனக் கேட்டார். உடனே சான்சன் "நீங்கள் காட்டிய வரிகளை எல்லாவற்றையும் சொல்ல முடியும்" எனக் கூறிவிட்டு, அப்படியே ஒப்பித்தார். என்னே அவருடைய நினைவாற்றல்!

சான்சனுக்கு அவருடைய பெற்ருேர்கள் இளம் அகவையிலே கற்பித்த உயர்ந்த நெறிகளைச் சான்சன் பசுமரத்தாணி போன்று தம் மனத்தில் பதிய வைத்துக்கொண்டார். இவர் இளமையிலேயே

'கண்ட மாலை' என்னும் பிணிக்கு இலக்கானார். இப்பிணியின் காரணத்தால் கண் ஒன்றின் பார்வையை இழந்தார். பிறகு 1729-ஆம் ஆண்டு 'அய்ப்பே கான்ட்ரியா' (Hypochondria) என்ற பிணியும் இவரை வருத்தியது. இதனால் இவருக்கு வாழ்வில் பல தொல்லைகள் குறுக்கிட்டன. இருப்பினும் விடாமுயற்சியுடன் பல செயல்களைச் செய்தவண்ணம் இருந்தார்.

இவர் இலத்தீனில் சிறந்த தேர்ச்சி பெற்றிருந்தார். சான்சனது அறிவாற்றலைக் குறிப்பிடும்போது, பிற அறிஞர்களுடைய பெயர்களைக் குறிப்பிட்டு, அவர்களைப்போன்று அத்துணை அறிவுடையவர் சான்சன் எனக் கூறாமல், சான்சனைப் போன்று அறிவு படைத்தவர் அன்னார் என்று சொல்வது வழக்கம். இதனால் இவருடைய அறிவாற்றலை நாம் நன்கு உணரலாம். இவர் பல இலக்கிய நூல்களை விருப்பத்துடன் பயின்று இருக்கிறார். "நான் படித்தவை கேளிக்கை நிரம்பியதும், பிரயாணங்களைப்பற்றியதுமான நூல்கள் அல்ல. எல்லாம் பழங்காலத்து இலக்கியப் பேராசிரியர்களால் எழுதப்பெற்ற இலக்கிய நூல்களேயாகும் எனச் சான்சன் கூறுகிறார். இவர் ஆச்சுபோர்டு பல்கலைக் கழகத்திற்குச் சென்றபோது டாக்டர் ஆடம்சு என்பவர் "சான்சன் ஒருவரே பல்கலைக் கழகப் படிப்புக்கேற்றவர்" எனக் கூறினார். இதனால் இவருடைய அறிவாற்றலை அறிய முடிகிறதன்றோ?

இவர் இளமையிலேயே சேக்சுபியர் (Shakespeare), ஒரேசு (Horase), ஓமர் (Homar), யூரிபிடசு (Euripides) போன்ற ஆசிரியர்களின் இலக்கியங்களைப் பயின்றார். இவரைப்பற்றி ஆடம் சுமித் (Adam Smith) என்ற அறமன்றத் தலைவர் "இன்றுள்ளவர்களில் சான்சானைக் காட்டிலும் மிகுதியான நூல்களைப் பயின்றவர்கள் ஒருவருமிலர் என மொழிந்தார். இவர் தாம் கற்ற பெம்ப்ரோக் (Pembaoke) கல்லூரியின்பால் கொண்ட பெருமதிப்பால் தாம் இறப்பதற்குச் சில ஆண்டுகட்கு முன் தாம் எழுதிய நூல்கள் அனைத்தையும் அக்கல்லூரியின் நூலகத்திற்கு மனமகிழ்வோடு அனுப்பிவைத்தார். இவர் "கிறைட்ச் சர்ச்" என்ற கல்லூரியில் பயின்றபோது ஏழ்மையால் இன்னலுற்றார். இருப்பினும் இவர் ஏற்பது இகழ்ச்சி என்ற கருத்தை வன்மையாக கடைப்பிடித்தார். ஏழ்மையின் காரணத்தால் மூன்று ஆண்டுகளுக்கு மேல் பயின்றும் பட்டம் பெறாமலேயே கல்லூரியை விட்டு நீங்கினார். சின்னாட்களுக்குப் பிறகு அவருடைய

தந்தையும் இறந்துவிட்டார். எங்ஙனமேனும் பட்டம் பெற வேண்டும் என எண்ணிய இவருக்கு ஏற்பட்ட இன்னல்களால் எடுத்தவினை முடியாமல் போயிற்று.

சான்சனின் உடல் கண்டமாலைத் தழும்புகளுடன் மெலிந்து காணப்பட்டது. இருப்பினும் இவரை எவிசபெத்–போர்டா என்ற பெண்மணியைக் காதலித்துத் திருமணம் செய்துகொண்டார். சான்சனைப்பற்றி அப் பெண்மணி கூறும்போது "இவரைப்போன்று மிக்க அறிவுள்ள ஒருவரை யான் இதுவரை கண்டதில்லை" என்று கூறுகிறார். திருமணத்திற்குப் பிறகு சான்சன் தொழிலுக்காக இலண்டன் சென்றார். அங்கு இவர் சிக்கனமாகவும் எளிமையாகவும் வாழ்ந்தார். மேல்நாட்டைச் சேர்ந்தவராக இருப்பினும் மதுவருந்தும் பழக்கம் இவரிடம் இல்லை. இவர் "இலண்டன்" என்ற பாடலை எழுதித் திங்கள் தாளிகை ஒன்றில் வெளியிட்டார். இப்பாடல் சான்சன் அவர்களின் ஆழ்ந்த அறிவாற்றலை உலகத்திற்கு அறிமுகம் செய்து, "மக்கள் மனத்தைக் கவரும் புலவன்" என்ற சிறப்பையும் தேடி தந்தது.

சான்சன் "மாந்தனின் பேராவலும் வெற்றுப் புகழும்" என்ற பாட்டையும், "ஐரீன்" என்ற துன்பியல் நாடகத்தையும் எழுதி வெளியிட்டார். "இசுக்காத்துலாந்தின் (Scotland) மேற்குத் தீவுகளின் பயணம்" "ஆங்கிலப் புலவர் வரலாறு" என்ற நூல்களையும் எழுதி வெளியிட்டார். 'ஆங்கிலப் புலவர் வரலாறு' என்ற நூல் வெளியீட்டிற்கு மூன்றும் சார்சு மன்னர் உதவினார். இந்நூல் மக்கள் எல்லாராலும் மகிழ்ச்சியோடும் ஆவலோடும் படிக்கப்பட்டது. இந்நூலில் எட்மண்டுவாலர், சான்மில்டன், சான்திரைடன், பண்டாரகர்போப், பண்டாரகர் எட்வர்டு யங், சொனதன் சுவிப்டு முதலியவர்களைப்பற்றி எழுதிச் செல்கிறார்.

இவர் ஆங்கில அகரமுதலி ஒன்று வெளியிட வேண்டுமென விரும்பினார். இதற்காக மிகுதியான உழைப்பும் முயற்சியும் எடுத்துக் கொண்டு அப்பணியை முடித்தார். இலக்கணமும், ஆங்கில இலக்கிய வரலாறும் கொண்டு தனிச் சிறப்புடன் விளங்கிய அகர முதலி முழு வடிவமெய்தி 1755-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15-ஆம் நாள் இரு தொகுதிகளாக வெளியிடப்பெற்றது. இவ்வகர முதலியைக் கண்டு அறிஞர் பலரும் புகழ்ந்தனர்; மக்கள் மனதைப் பறிகொடுத்து நின்றனர். சான்சன் எழுதிய கட்டுரைகளை நிறையப் படித்து வந்தவர்களில்

இசுக்காத்துலாந்து அறிஞரான பாசுவெல் என்பவரும் ஒருவர் ஆவார். இவர் சான்சனுல் வெளியிடப்பெற்ற அகரமுதலியைக் கண்ணுற்ற போது இவ்வறிஞரைக் கண்டு இவருடன் நட்புக்கொள்ள வேண்டுமெனப் பேரவாக் கொண்டார். அங்ஙனமே அவர் அறிஞர் சான்சனைச் சந்தித்து நட்புக்கொண்டார். 1768-ஆம் ஆண்டு மூன்ரும் சார்சு மன்னர் சான்சனைச் சந்தித்து வாழ்த்தினுர். சான்சனின் ஆற்றல் கண்டு "டப்ளின் பல்கலைக் கழகம்", 'சட்ட அறிஞர்' என்ற பட்டத்தை அவருக்கு அளித்தது.

நூல்களைப் படிப்பதோடு படித்தவற்றை எண்ணியும் உலகியலைக் கூர்ந்து கவனித்தும் பலவகையில் செய்திகளையும் பட்டறிவினையும் திரட்டி வைத்திருந்த சான்சனது குரலுக்குப் பொருத்தமான சொற்களும், கருத்துகளும் ஓடிவரக் காத்திருந்தன. இக்கருத்துகளை நன்முறையில் வெளியிடும் திறமை பெற்றிருந்ததால் "இராம்பலர்" என்ற தாளிகையை நடத்தினுர். ஆனுல் பல தொல்லைகளுக்கிடையில் அஃது இரண்டு ஆண்டிற்குள் நின்று விட்டது.

சான்சன் நாவன்மை மிகுந்தவர்; நகைச்சுவையான பேச்சுகளிலும், கவர்ச்சியுடன் கூடிய கருத்து நிறைந்த சொற்பொழிவுகளிலும் வல்லமையுடையவர்; சான்சன் அன்பும், இரக்க மனப்பான்மையும் உடையவர்; இவருக்கு இறைவழி பாட்டில் பற்றுண்டு. புத்தாண்டு நாள், மனைவி பிறந்த நாள், பெரிய வெள்ளிக்கிழமை, ஈசுடர் திருநாள், தம் பிறந்த நாள் ஆகிய நாட்களை இறை வழிபாட்டிலும், அமைதியாக எண்ணுவதிலும் கழிப்பார். பிணியின் வன்மை வளரத் தொடங்கிய காரணத்தால்1783-ஆம் ஆண்டு திசம்பர் திங்கள் 13-ஆம் நாள் மாலை 7 மணிக்குச் சான்சன் மறைந்தார். சான்சனது வரலாற்றை அவருடைய நண்பர் பாசுவெல் எழுதியுள்ளார். "முயற்சி திருவினையாக்கும்" என்ற முதுமொழிக்கேற்ப முயன்று புகழ்பெற்று மறைந்தார் சான்சன்.

வருங்காலச் செல்வங்களே! விவேகானந்தர் கூற்றுப்படி சான்சன் அகரமுதலி ஒன்றைத் தம் நினைவுப் பொருளாக உலகுக்கு விட்டுச் சென்ரூர். அவ்வாறு நீங்கள் விட்டுச் செல்லும் பொருள் யாது? நீங்கள் அவர் போன்று அறிஞராகத் திகழ வேண்டாவா? இலக்கியங்களைப் பயிலவேண்டாவா; எழுதவேண்டாவா? முயலுங்கள் வெற்றியடையலாம். "ஊக்கமது கைவிடேல்." O

# தெரிந்து கொள்ளுங்கள்

தொகுப்பு :— இரா. வ. சனார்த்தனம், பள்ளிநேலியனூர்.

O உலகிலேயே மிகப் பெரிய கற்காரைக்(கான்கிரீட்)கட்டிடம் 'மரிஞ சிட்டி'. அமைத்தவர் "பெர்ட்லாண்டு கோல்டு பர்க்". 114' விட்டமும், 110' அடித்தளமும், 448 விடுதிகளும், 40 மாடிகளும் இருக்கின்றன.

O உலகிலேயே பெரிய 'செயலகக் கட்டிடம்' அமெரிக்காவில் உள்ள "பெண்டகன்" கட்டிடம். அமைவிடம் 34 குறுக்கம் (ஏக்கர்) பரப்பு 65,00,000 ச. கற்கள். 32,000 பெயர்கள் பணிபுரிகின்றனர். வெளிமுற்றங்களின் நீளம் மட்டும் 17 கல்.

O உலகிலேயே பெரிய மலர் "சாவா"வில் இருக்கிறது. எடை 15 'இராத்தல்'. அதன் விட்டம் 3½'. இரு முனைகளுக்கும் இடையில் உள்ள தொலைவு *15'*.

O உலகிலேயே பெரிய 'மாமரம்' 'அம்மேலா' மாவட்டத்தில் 'பெர் ஞலா'வில் இருக்கிறது. அடிச்சுற்றளவு 34'. 14 கிளைகள் பெரிய மரங்கள்போலவே உள்ளன.

O உலகிலேயே உயரமான 'நீர்வீழ்ச்சி' வட அமெரிக்காவில் உள்ள "ஏஞ்சர்" நீர்விழ்ச்சி. உயரம் 3300'.

O உலகிலேயே பெரிய கற்படிமம் (சிலை) 'அமெரிக்க விடுதலைத் தலைவியின் கற்படிமம்.' உயரம் 305'. இடைச் சுற்றளவு 35'. அது நிறுத்தப்பட்டுள்ள நிலை (பீடம்)யின் உயரம் 151'. இதை உருவாக்க 88 கல்லெடை எடையுள்ள 300 செப்புத்தகடுகள் பயன்பட்டன. செலவு 10,00.000 தாலர்கள்

O தமிழ் நாட்டில் மொத்தம் *33,000* காவலர்கள் (Police men) இருக்கின்றனர்.

O வியட்நாம் போருக்காக ஆண்டொன்றுக்கு *80,00,00,00,00,000* உருபா செலவழிக்கிறது அமெரிக்க அரசு.

O சென்ற ஆண்டு இந்தியாவில் 210,00,00,000 பெயர்கள் புகை வண்டியில் பயணம் செய்துள்ளனர்.

O தமிழகத்தில் ஏற்பட இருக்கும் 67 உயர்நிலைப் பள்ளிகளையும் சேர்த்து மொத்தம் 2443 உயர்நிலைப் பள்ளிகள் இருக்கும்.

O 'உருசியாவின் மக்கள் தொகை 23,44,01,000.

O நம் நாட்டில் தற்பொழுது 371 காண்டா விலங்குகள் உள்ளன.

O வரும் 1968ஆம் ஆண்டு சென்னையில் 300 குறுக்கம் நிலப்பரப்பில் 20 கோடி உருபா செலவில் 'அனைத்துலகப் பொருட்காட்சி, ஒன்று நடைபெற இருக்கிறது.

O வெட்டுக்கிளிக்கும் தேனீக்கும் 5 கண்கள்.

O 'இந்தியா'வில் இன்று ஏறத்தாழ 50,00,000 பேர் 'எலும்புருக்கி' நோயால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

O 1 விரற்கடை (அங்குலம்) மழை என்பது 1 குறுக்கம் நிலப்பரப்பில் 113 கல்லெடை (டன்) தண்ணீர் நிற்கும் அளவாகும்.

O உலகிலேயே பெரிய சுவர் சீன நாட்டைச் சுற்றியுள்ள 'சீனப் பெருஞ் சுவர்'. நீளம் 1790 கல். அகலம் 22'. உயரம் 20'.

O உலகிலேயே பெரிய 'கண்காட்சிச் சாலை' 'கனடா'வில் 'மாண்ட்ரியல்' நகரில் நடைபெறுகிறது. 1000 குறுக்கம் நிலத்தில் 249 கோடி உருபா செலவில் அமைக்கப்பட்டுள்ள அதில் 70 நாடுகள் கலந்துகொண்டன.

O 1 க. விரற்கிடை தோலில் 30 இலக்கம் 'உயிர்மங்கள்' (Cells) 12' நீள நரம்புகள், 3' நீளக் குருதிக் குழாய்கள் முதலியன இருக்கின்றன.

O தோலின் பருமன் கண்ணிமைகளில் 1/50 விரற்கடையும், உள்ளங்கை முதலியவற்றில் 1/3 விரற்கடையும் ஆகும்.

O கதிரவன், 10,00,00,00,00,000 ஆண்டுகளாக வெடித்துக் கொண்டு இருக்கிறதாம்.



# பிழையில்லாமல் எழுதுங்கள் பேசுங்கள்

(புலவர் தி. நா. அறிவு ஒளி.)

(இப்பகுதியில் இதுவரை மாணவர்களும் பிறரும் செய்யும் பொதுவான சில பிழைகளும், அவற்றை நீக்கிப் பேசும் முறைகளும் வெளி வந்தன. இனி, இப்பகுதியில். மாணவரும் பிறதமிழன்பரும் நினைவில் வைத்துக் கடைப் பிடிக்கவேண்டிய இலக்கண முறைகளையும், தமிழ் மொழி மரபுகளையும் புலவர் திரு. தி. நா. அறிவுஒளி அவர்கள் தொடர்ந்து எழுதி வருவார். பெரும்பாலும் தமிழ் மொழியைப் பிழையாகவே எழுதியும் பேசியும் வருகின்ற இக் காலப் பள்ளி, கல்லூரி மாணவர்களும் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களும் இவ்வரிய கட்டுரைக் கருத்துகளை ஊன்றிப் படித்து நினைவில் இறுத்துவார்களாக. (– ஆ – ர்)

தமிழ் மொழி பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக வழங்கி வரும் செம்மொழி. இலக்கண வளமும் இலக்கியச் செம்மையும் வாய்ந்த மொழி; இனிய ஒலிப்பு முறையும் அழகிய எழுத்து முறையும் கொண்ட மொழி; தனித் தன்மையும் பல சிறப்பியல்புகளும் நிறைந்த ஈடு இணையற்ற மொழி; பிறநாட்டுப் புலவோர் பலர் போற்றி வியந்து பாராட்டிய மொழி; தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, திருக்குறள், பதினெண் கீழ்க்கணக்கு, பல தொடர்நிலைச் செய்யுள்கள், அளவில்லாத சிற்றிலக்கியங்கள், எண்ணற்ற பாடல்கள், பல கலை–அறிவுத்துறை நூல்கள் எனும் செல்வங்களை ஈன்று புறந்தந்த மொழி நம் தாய்மொழியாகிய தனிச் செந்தமிழேயாகும்!

தமிழை மரபு கெடாமல் முன்னோர் வளர்த்தனர். ஆதலால் அது பல கோடியாண்டுகளாக வாழ்ந்து; வளர்ந்து வருகிறது. தமிழின் மரபு மாறாமல் அதைப் பயின்று வளர்க்க வேண்டும். பிழையில்லா

மல் பேசலும் எழுதுதலும் மிக மிக இன்றியமையாததாம். பிறமொழிச் சொற்களை—எழுத்துகளைத் தமிழில் கலக்கக்கூடாது.

பேசும்போது ஒலிப்பிழை யில்லாமலும், கொச்சைச் சொற்களைக் கலவாமலும் பேசுதல் சிறப்பாம். எழுதும்போது கொச்சை நடையில் எழுதலாகாது.

பிழையில்லாமல் எழுத வல்லின எழுத்துகள் மிகும் இடங்களும், மிகாத இடங்களும், புணர்ச்சி முறைகளும், மொழியமைப்பின் மரபுகளும், சொல்லிசைவின் முறைகளும் நமக்கு நன்கு தெரிந்திருக்க வேண்டும்.

ஒரு சொல், இன்னொரு சொல்லோடு முறைப்படி சேருவதைப் 'புணர்ச்சி' என்பர். இரு சொற்கள் சேரும்போது ஒரு மாறுதலும் ஏற்படாவிட்டால், அதை இயல்புப் புணர்ச்சி என்பர். தமிழ் + மொழி, தமிழ் + வாழ்க—இவ்விரு புணர்ச்சிகளும் 'தமிழ்மொழி', 'தமிழ் வாழ்க' என அமையும். இஃது இயல்புப் புணர்ச்சி.

ஒரு சொல்லோடு பிறிதொரு சொல் சேரும்போது, நிலைமொழியிறுதியிலும், வருமொழி முதலிலும் எழுத்து மாற்றம்—[புது எழுத்து தோன்றுதல்—எழுத்து நீங்குதல் - எழுத்து மாறுபாடு அடைதல் - இவற்றைத் தோன்றல்—கெடுதல்—திரிதல் என்பர்] ஏற்படும். இதை இயல்பில் புணர்ச்சி (விகாரப் புணர்ச்சி) என்பர்.

தமிழ் + செல்வி = தமிழ்ச் செல்வி — இதில் முன்னில்லாத 'ச்' என்ற மெய் தோன்றியது.

அறம் + நூல் = அற நூல் இங்கு முன்னிருந்த 'ம்' என்ற மெய் கெட்டது. பனை + காய் = பனங்காய், நல் + தமிழ் = நற்றமிழ் - இவ் விடங்களில் நிலைமொழி - வருமொழிகளில் எழுத்துகள் மாறுபாடு அடைந்தன. இதையே 'திரிதல்' என்பர்.

தமிழின் புணர்ச்சி யிலக்கணம் மிகவும் பண்பட்டது, நாவின் இயற்கைக்கும், எளிய ஒலிப்புக்கும் ஏற்ப அமைந்தது ; சிறந்தது. மிக இனிமையான புணர்ச்சி யிலக்கணம் கற்கச் சுவையானது. அதனைத் தொல்காப்பியம், நன்னூல் போலும் விரிவான பெரிய இலக்கண நூல்களில் நன்கு பயிலலாம்.

மொழியென்ற பழத்தோட்டத்திற்கு இலக்கணம் வேலியாகும். வேலியில்லாமல் பயிர் பாழ்படும். இலக்கணமில்லா மொழியும் அழியும். இலக்கணத்தைப் போற்றுதலும், ஐயந்திரிபறக் கற்றலும், நல்லறிவுடையோர் சிறப்புக் கடமையாம் பிறர் கூறுவதைத் தெளிவாக அறியவும், நாம் பிறர்க்குப் பிழையின்றிக் கருத்தை வெளியிடவும் இலக்கண அறிவு வேண்டும். மாணுக்கர் ஆர்வத்தோடும் ஊக்கத்தோடும் இலக்கணப் புலமை பெறத்துடிப்போடு முன் வரவேண்டும்.

இந்நூலில் சொற்புணர்ச்சியில் வல்லின ஒற்று மிகும் இடங்களும், மிகாத இடங்களும், தக்க எடுத்துக்காட்டுகளோடு விளக்கப் பெற்றுள்ளன. வழூஉச் சொற்களுக்குரிய திருத்தங்களும் பிழையறப் பேச,எழுத உதவும் வரையறைகளும் ஓரளவுக்கு உணர்த்தப்பட்டுள்ளன. இவை தவிர இன்னும் பல வரையறைகளும், முறைகளும், புறனடைகளும் இலக்கண நூல்களில் விரிவாக அமைந்துள்ளன.

இந்நூலிலுள்ள நூற்பாக்களை மறவாமல் நினைவில் நிறுத்த வேண்டும். குருட்டுத் தன்மையாக மனப்பாடம் செய்வதிற் பயன் இல்லை. ஒரு நாளைக்குப் பத்து நூற்பாக்களைக் காலையிலும் மாலையிலும் பொருள் உணர்ந்து - நன்கு புரிந்து - படிக்க வேண்டும். பல நாள்கள் பலமுறை பொருளுணர்ச்சியோடு படிக்கவேண்டும். எழுதும் போது படித்ததை நினைவு கூரவேண்டும். ஓய்வாக இருக்கும்போது இதிலுள்ள வரையறைகளை எண்ணிப் பார்க்க வேண்டும். தான் படித்ததை வீட்டிலுள்ளவர்களுக்கும், நண்பர்களுக்கும், பிறர்க்கும் விளக்கிக் கூறவேண்டும். எடுத்துக்காட்டுகளை நினைவில் பதிப்பது மிகவும் உதவியாயிருக்கும். (தொடரும்)

---

தெரிந்து கொள்ளுங்கள்: (தொடர்ச்சி)

O நிலவு மறைந்து விட்டால் உலக உருண்டையின் சுற்றும் வேகம் 1000 கல்லிலிருந்து 6000 கல்லாக உயர்ந்து விடும். 1 நாள் என்பது 4 மணி நேரம் ஆகிவிடும்.

O குருதி, மூளையை விட்டு வெளியேறும்பொழுதும், குடற் பகுதியை விட்டு வெளியேறும்பொழுதும் மிகுந்த வெப்பம் அடைகிறது. காரணம் மூளையில் புது உயிர்மங்கள் தோற்றுவிக்கப் படுகின்றன. குடலில் உணவு, ஆற்றலாக மாற்றப்படுகிறது. O

# எங்கள் பெயர்களைத் தூய தமிழ்ப் பெயர்களாக மாற்றிக் கொண்டோம்.

சாத்தனூர் அரசினர் உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் மாற்றிக்கொண்ட தனித்தமிழ்ப் பெயர்கள்,

| முன்னைய பெயர் : | மாற்றிய பெயர் ; |
| --- | --- |
| மு. ஆறுமுகம் | மு. பூங்குன்றன். |
| பொ. சத்தியமூர்த்தி | பொ. இளங்கோ |
| மு. தின்னல் துரை. | மு. இளங்கோ |
| இரா. அரங்கநாதன் | இரா. நெடுமாறன் |
| சு. சிருட்டிணன் | சு. மாறன்வழுதி. |
| பெ. பொன்னுசாமி | பெ. இளம் வழுதி. |
| ப. பாண்டுரங்கன் | ப. தமிழ்நம்பி |
| தனஞ்செயன் | இளஞ்செழியன். |
| பொ. அன்பழகன் | பொ. இளங்கோ |
| இரா. நடராசன் | இரா. நெடுஞ்செழியன் |
| வெ. செல்வராசு | வெ. எழில்மாறன் |
| ம. கண்ணன் | ம. மாறன் |
| கோ. அரங்கநாதன் | கோ. செழியன் |
| வீ. மனோகரன் | வீ. தூயவன் |
| வே. சத்தியநாராயணன் | வே. அறிவு ஒளி. |
| அர. வெங்கடேசன் | அர. பூங்குன்றன். |
| இரா. கோபால் | இரா. இளங்கோவன். |
| ப. ஜலஉஷா | ப. கயல்விழி. |
| ப. கலாவதி | ப. மலர்க்கொடி. |

பெங்களூர், உக, கௌதம நகர், "திருவள்ளுவர் இரவுப் பள்ளி"யின் மாணவ மாணவிகள், ஆசிரியர்கள் மாற்றிக்கொண்ட தூய தனித்தமிழ்ப் பெயர்கள் -

| | |
| --- | --- |
| க. ஏ. மோகன் | க. ஏ. அன்பழகன். |
| இரா. பெ. தாசு. | இரா. பெ. பூங்குன்றன். |
| உரு. சி. கோவிந்தசாமி | உரு. சி. பசுமலை. |
| சுகுமாரன் | தமிழ் நம்பி |

| | |
|---|---|
| இலக்குவண மூர்த்தி | செம்பியன் |
| ஈசுவரன் | கோவலன் |
| சி. சுப்பிரமணி | சி. சேவற்கொடியோன் |
| பழனி | தமிழ் வென்றி |
| குணசேகர் | சேயோன் |
| இராமலிங்கம் | பாண்டியன். |
| பாண்டுரங்கன் | இளங்கோ |
| வெண்ணிலா | கயற் கண்ணி |
| மண்ஞன்டி | மதியழகன் |
| பிரபாவதி | மாதவி |
| ஞானப் பிரகாசு | அறிவுச் சுடர் |
| சம்பங்கி | கண்ணகி |
| இலக்குமி | திருச்செல்வி |
| விசயா | வெற்றிச் செல்வி. |
| ஆனந்த வள்ளி | தமிழரசி |
| சாவித்திரி | பூங்குழலி |
| அம்சா | மணிமேகலை |
| செல்வராசன் | மணி வண்ணன் |
| செய லக்குமி | வெற்றிச் செல்வி |

நம்பியூர், கெடாயூர் அஞ்சல், இறைவிழியன் உதவியால் பெயர் மாற்றம் செய்துகொண்ட தமிழ்த்தம்பிகள்.

| | |
|---|---|
| எசுரு | மணிவண்ணன் |
| பாப்புக்குட்டி | தமிழ்ச்செல்வன் |
| ஆசீர்வாதம் | தமிழரசு |
| அன்புராசு | அன்பரசு |
| உருபன் | அறச்செல்வன் |
| அர. பொன்னுச்சாமி | அருட்செல்வன் |
| வெ. ப. சுப்பிரமணியம் | நக்கீரன் |

*பெயர் மாற்றம் செய்துகொண்ட தமிழ்த்தம்பி தங்கைகள் எல்லாரும் சிறந்த தமிழ்க்குடி மக்களாக எல்லா நலனும் பெற்று விளங்க வாழ்த்துகின்றோம்.*

(வளரும்)




சென்ற மாதப் புதிர்களில் புதிர் 1-இன் விடை :

முதலில் மன்னனும் கண்ணனும் படகில் சென்று அக்கரையை அடைந்து மன்னனை அங்கேயே விட்டுவிட்டுக் கண்ணன் மட்டும் இக்கரைக்கு வந்தான். பிறகு வண்ணன் படகில் சென்று அக்கரையை அடைந்து மன்னனை அனுப்பினான். மீண்டும் மன்னனும் கண்ணனும் படகில் அக்கரை சென்றனர். மன்னனை அங்கேயே விட்டுவிட்டுக் கண்ணன் இக்கரை வந்தான். பிறகு, திண்ணன் மட்டும் படகில் சென்று அக்கரையில் உள்ள மன்னனை அனுப்பி வைத்தான். இறுதியில் மன்னனும் கண்ணனும் படகில் சென்று அக்கரையை அடைந்தனர்.

புதிர் 2-இன் விடை.

தந்தை முதலில் கொண்டுவந்த பழங்கள் 31; எனக்குக் கொடுத்த பழங்கள் 16; தங்கைக்கு 8; தம்பிக்கு 4; மிகுந்தவை 3 அப்பாவுக்கு.

புதிர் 3-இன் விடை.

அவர்கள் இருவரும் தாயும் மகனும்.

இம்மாதப் புதிர்.


ஒரு மாட்டுப் பண்ணையாளரிடம் மொத்தம் 30 மாடுகள் இருந்தன. அவற்றில் பத்து மாடுகள் ஒவ்வொன்றும் 2 பதினம் (இலிட்டர்) பால் கறக்கக் கூடியன. அடுத்த 10 மாடுகள் ஒவ்வொன்றும் $^{3}/_{4}$ பதினம் பால் தரக் கூடியன. மிகுதிப் 10 மாடுகள் ஒவ்வொன்றும் $^{1}/_{4}$ பதினம் கறக்கக் கூடியன.

பண்ணையார் தம் இறுதிக் காலத்தில் தம்மிடம் உள்ள மாடுகளைத் தம் பிள்ளைகள் மூவருக்கும் பிரித்துத்தர விரும்பினார். பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் மாடுகளும், அவை கறக்கின்ற பாலின் அளவும் சமமாக இருக்க வேண்டும் என்பது அவர் விருப்பம். இச் சிக்கலை அவர் எப்படித் தீர்த்து வைப்பார் ?

— இப்புதிரை எழுதியவர் :

— கோ. இராசாராம், 19, இரவித் தெரு, தண்டு (Cantonement) திருச்சி-1,

விடை அடுத்த இதழில்!



# எங்கள் விருப்பம் என்ன?

O 'தமிழ்ச்சிட்டு' கருத்தையும் கண்களையும் கவர்கிறது. அது தனித்து இல்லாமல் தென்மொழியுடனேயே இணைந்திருந்தால் தென்மொழியின் சிறப்பு மேலும் ஓங்கியிருக்கும். ஒவ்வொன்றையும் தனித்தனியே வாங்காமலே இரண்டின் பயனையும் (ஒவ்வொருவரும்) ஒருங்கே பெற வாய்ப்பாக அமைந்திருக்கும். மேலும் தென்மொழியை மட்டும் படிப்பவரெல்லாரும் தமிழ்ச்சிட்டில் வரும் செய்திகளையெல்லாம் ஏற்கனவே அறிந்திருப்பர் என்று நம்புவதற்கில்லை. படித்திருந்தாலும் மறுமுறை படிப்பதில் நன்மைதானே! இதுபற்றி எண்ணிப் பார்க்க வேண்டுகின்றேன். —'தமிழ்ச்சிட்டு' அன்பன், சேலம்-7.

—''தமிழ்ச்சிட்டு''க் கருத்துகளைப் பெரியவர்கள் படிக்கலாம். ஆனால் ''தென்மொழி''க் கருத்துகளைத் தமிழகச் சிறுவர்கள் புரிந்துகொள்வது கடினமே. தமிழ்க்குடும்பம் ஒவ்வொன்றும் 'தென்மொழி','தமிழ்ச்சிட்டு' இரண்டையும் வாங்கினால், முன்னது பெரியவர்களுக்கும் பின்னது சிறுவர்களுக்கும் பயன்படுமன்றோ. மாதம் 65 காசு விலையிலேயே இரண்டையும் பெற்றுப் பயன்படுத்திக் கொள்ளலாமே! —ஆசிரியர்.

O 'சிட்டை'க் கிழமை யிதழாக்கவும். சில பக்கங்களையும் கூடுதலாக்கிக் விலையைக் கூட்டலாம். நிறைய விளக்கப்படம் வருதல் வேண்டும். சிறுவர் இதழில் படங்கள் நிறைந்திருத்தல் நல்லது. வேண்டுமானால் நான் கைமாறு கருதாமல் ஓவியங்கள் தீட்டித் தருகின்றேன். நான் ஓர் ஓவிய ஆசிரியர்.

—க. கலைச்செல்வன், ஆ. அ. உ. பள்ளி. புகழூர், கருவூர் வட்டம்.

—எல்லாவற்றுக்கும் பொருள் வாய்ப்பு வேண்டும். தமிழ்ச்சிட்டுக்கு இப்பொழுதுள்ள நிலையில் இப்படி வந்து கொண்டிருப்பதே பெரிது. நிலை உயரும் பொழுது தங்கள் விருப்பங்கள் கட்டாயம் நிறைவேறும். அதுவரை பொறுத்திருக்கவும். முடிந்தால் அட்டைப் படங்களையும் பிற தலைப்புப் படங்களையும் வரைந்து அனுப்புங்கள். நன்றியுடன் ஏற்றுக் கொள்கின்றோம். —(ஆ-ர்)

O 'தமிழ்ச்சிட்டு' தொடங்கிய நாளிலிருந்து தவறாமல் படித்து வருகின்றேன். முன்பைவிட இப்பொழுது என்னிடம் மிகுந்த வளர்ச்சி உள்ளது என்பது உண்மை. முன்பு வெளியிட்டது போலவே வண்ணத் தாளில் வெளியிட்டு வாருங்கள்.

—ப. தமிழ்மணி, ஏழாம் வகுப்பு, வ. தே. உ. பள்ளி. வலிவலம்.

O தங்களின் குறையற்ற நிறைவாழ்வுக்கு இன்னருள் புரிய இறைத் தமிழ் அன்னையின் பொன்னடி போற்றி இறைஞ்சுகின்றேன். 'தென்மொழி'யில் இருந்து வந்த 'கேள்விச் செல்வம்' இடையே நின்று போனமையால் துன்புறும் என் நெஞ்சம் 'தமிழ்ச்சிட்டு' இதழில் தொடரின் இன்புறும். —தாமரை, சீராமபுரம், பெங்களூர்-21.

—விரைவில் வெளிவரும். பொறுத்திருங்கள். —(ஆ-ர்)

# பழகிக்கொள்.

விடியலில் எழநீ, பழகிக் கொள்.
விளங்காப் பாடங் கற்றுக் கொள்.
மடியினை நீக்கப் பழகிக் கொள்.
மதித்து நடப்பதைக் கற்றுக்கொள் !

படித்ததை நினைக்கப் பழகிக் கொள்.
பணிவொடு பேசக் கற்றுக் கொள் !
துடித்தெதையுஞ் செய ஒண்ணுதே !
துன்ப மிழைக்க எண்ணுதே.

பொய்சொல நெஞ்சில் நினையாதே ;
பொறுமையை இழக்க விழையாதே !
ஐயம் வருங்கால் தீர்க்க முனை !
அதனை வளர்த்தல் தொல்லை வினை !

அன்னை, தந்தை, பெரியோர்கள்,
ஆரெவர் சொற்கும் கீழ்ப்படிய,
உன்னைப் பழக்கிக் கொண்டாலே,
உன்போற் சிறுவர் நடப்பாரே !

சினத்தை அடக்கப் பழகிக் கொள்.
சிரிப்பதை என்றும் மறவாதே !
பணத்தைப் பெரிதாய் எண்ணுமல்
பண்பினை எண்ணக் கற்றுக் கொள் !

அச்சம் உன்னை மாய்த்து விடும்.
அயலார் அஞ்சவும் செய்யாதே !
வஞ்சனை செய்ய எண்ணுதே;
வாயாடுதலை நினைக் காதே !

மற்றவர் தொழிலைப் பழிக்காதே !
மண்மேல் எவரும் ஓரினமே !
கற்றவர் பேச்சைக் கேட்க விழை !
கல்லார் பேச்சைத் தள்ள முனை !

பழகிக் கொள் நீ ! பழகிக் கொள்.
பாட்டும் கூத்தும், ஓவிய மும் !
பழகிக் கொள் நீ ! பழகிக் கொள் !
படிக்கவும் ஆடவும் பழகிக் கொள் !

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.